**பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை**

**ප්‍රධානලේකම්කාර්යාලය,උතුරුපළාත්සභාව**

**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

மாகாணசபை வளாகம், A9வீதி, கைதடி
පළාත්සභාව සංකීර්ණය, A9පාර, කයිතඩි
**Provincial Council Complex , A9Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


My No: NP/09/A&P/4/12/Circular/2024 Date: - 05.07.2024

**மாகாணநிதி சுற்றுநிருப இலக்கம்: PF/AP/1/2024**

செயலாளர்கள்,
பிரதிப்பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

**வெளித்தரப்பினருக்காக முற்பணத்தொகையை செலுத்துவதனை கணக்கு வைத்தல்**

நிதி ஒழுங்கு விதி 365(1) இன் பிரகாரம் நிதியாண்டினுள் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இடைக்கால முற்பணத்தினை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு இருந்த போதிலும், அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லாத நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் முற்பணத்தினை வழங்குவதற்கு அதன் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

தற்போது அரசாங்க அலுவலகக் கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போதும் வேலை ஒப்பந்தங்களுக்காக முற்பணத் தொகையை செலுத்தும் போதும் அது சம்பந்தமாக பின்பற்ற வேண்டிய கணக்கு வைத்தல் ஒழுங்கு முறைகள் குறித்து தெளிவான வழிகாட்டல் இல்லாத படியினால் வெளித்தரப்பினருக்கு வழங்கப்படுகின்ற முற்பணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் ஒழுங்கு முறைகளை பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

1. அலுவலக கட்டட வாடகைக்காக முற்பணங்களை செலுத்தும் போது அந்த முற்பணத்தொகையையும் செலவு விடய இலக்கம் 1404 அதாவது, குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி நிர்வாக வரி செலவு விடயத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.

   வேலை ஒப்பந்தங்களுக்காக முற்பணங்களை செலுத்தும் போது **செலவு விடய இலக்கம் 2104 இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வேலை முற்பணங்களுக்காக மாத்திரம்** உத்தேச முறைமைக்கு அமைவாக கணக்கு வைத்தலை மேற்கொள்ள வேண்டிய அதே வேளையில், ஏனைய மூலதன செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற வேலை முற்பணங்களுக்காக அந்த கணக்கு முறைமை ஏற்புடையதாகாது என்பதுடன் அவ் உரிய வாக்குப்பண செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முற்பணங்கள் வழமையான கணக்கீட்டு முறைமைக்கு உட்படுத்தப்படும்.

2. முற்பணங்களை செலுத்துதல் செலவுகள் மேற்கொள்ளப்படுகின்ற வருடத்தில் செலவாக கணக்கு வைப்பதன் காரணமாக கணக்குக்கால எல்லைகளை தாண்டி செலுத்தப்பட்ட முற்பணத் தொகை அரச கணக்கிற்கு உள்ள உரிமையொன்றாக புலனாகாது. அதனால் முற்பணத் தொகையை செலுத்துவது அரசாங்க கணக்கில் வெளிப்படுத்துவதனை நோக்காக கொண்டு பிரதான பேரேட்டு கணக்கு இலக்கம் 9188 (வாடகை மற்றும் வேலை முற்பண கணக்கு) மற்றும் 9189 (வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்க கணக்குகள்)) அறிமுகப்படுத்தப்படுகின்றன.

3. முற்பணத் தொகையை செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அமைச்சினால் / திணைக்களத்தினால் செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு முற்பணத்தின் பொருட்டும் மேலே குறிப்பிடப்பட்ட பிரதான பேரேட்டுக் கணக்கின் கீழ் **தனியான கணக்கு இலக்கமொன்றை மாகாண திறைசேரியின் கணக்குகள், கொடுப்பனவின் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.** அதே வேளையில் முற்பணத் தொகையை செலுத்தும் போது செலவு விடயம் மற்றும் காசேடுகளில் மேற்கொள்கின்ற குறிப்புகளுக்கு மேலதிகமாக பின்வரும் இரட்டைப்பதிவு குறிப்பபையும் கணக்கு வைத்தல் வேண்டும்.

    9188- வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு வரவு
    9189- வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு செலவு

    (செலுத்தப்பட்ட மொத்த வாடகை முற்பணம் அல்லது வேலை முற்பணத் தொகை)

4. ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் அந்த வருடத்திற்குரிய வாடகைப் பெறுமதியை அல்லது ஒப்பந்தங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வேலையின் பிரகாரம் அறவிடப்படுகின்ற முற்பணத் தொகையை பின்வருமாறு கணக்கு வைத்தல் வேண்டும்.

    9189- வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு வரவு
    9188- வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு செலவு

    (ஒவ்வொரு வருடத்திற்குமுரிய நிலுவை செய்யப்படுகின்ற வாடகையின் பெறுமதியை அல்லது ஒப்பந்தங்களின் ஒரு பகுதியை செலுத்தும் போது அறவிடப்படுகின்ற வேலை முற்பணத்தின் பெறுமதியை முற்பண கணக்கிலிருந்து நீக்குதல்)

5. மேலே குறிப்பிடப்பட்ட பிரதான பேரேட்டுக் கணக்குகளில் வருட இறுதியில் உள்ள நிலுவையின் மூலம் தொடர்ந்தும் அறவிடவேண்டிய முற்பணத் தொகை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதே வேளையில் முற்பணங்கள் சம்பந்தமாக அரசாங்கத்திற்குரிய உரிமைகளும் அரச கணக்குகள் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

6. மேலே காட்டப்பட்டுள்ள கணக்குக் குறிப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் இற்றைப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, இதன் பின்னர் முற்பணங்களை செலுத்துவதனை கணக்கு வைத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

இ.இளங்கோவன்
பிரதம செயலாளர்
வடமாகாணம்

இ.இளங்கோவன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்

பிரதி:

1. உதவிக் கணக்காய்வாளர் நாயகம், வடமாகாணம் - தகவலுக்காக
2. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வடமாகாணம் - தகவலுக்காக